## நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.
## சி.சி. 172/2020

2023ம் ஆண்டு ஜனவரி மாதம் 30ம் நாள் திங்கட்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா. 1வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி திரு.எஸ்.பூபதி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மணிகண்டன் | வயது | 28 |
| த.பெ.(அ)க.பெ. | கண்ணுகான் | தொழில் | போஸ்ட்மேன் |
| ஊர்/பணிபுரியுமிடம் | விஷமங்கலம் | சமயம் | இந்து |
| வட்டம் | திருப்பத்தூர் | சாதி | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | | |

<u>முதல் விசாரணை :</u> எதிரி மனுவின் பேரில் ஆஜரில்லை.

(1) நான் விஷமங்கலம் கிராமத்தில் வசிக்கிறேன். நான் போஸ்ட்மேனாக வேலை செய்து வருகிறேன். சுமார் 7 ஆண்டுகளுக்கு முன்பு ஒருநாள் தேதி, மாதம் நினைவில்லை. நான் எங்கள் ஊரிலிருந்து பொருள் வாங்குவதற்காக இருசக்கர வாகனத்தில் திருவண்ணாமலை டு திருப்பத்தூர் மெயின் ரோட்டில் திருப்பத்தூருக்கு வந்து கொண்டிருந்தேன். நான் வெப்பலாம்பட்டி மேம்பாலம் அருகில் வந்து கொண்டிருந்த போது அந்த இடத்தில் உள்ள சாலை வளைவில் விபத்து ஏற்பட்டு ஒரு நபர் கீழே விழுந்து கிடந்தார். நான் உடனே அருகில் சென்று பார்த்தேன்.

(2) அப்போதுதான் அவர் எனது உறவினர் நவீன் குமார் என தெரிந்தது. அவருக்கு உடல் முழுவதும் பலத்த காயம் ஏற்பட்டிருந்தது. ஆம்புலன்ஸிற்கு தகவல் தெரிவித்து வருவதற்கு காலதாமதம் ஆனதால் ஆட்டோவில் வைத்து திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்து சேர்த்தேன். அவரது வீட்டிற்கு தகவல் சொன்னேன். விபத்து சம்மந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். நான் சம்பவ இடத்திற்கு சென்ற சமயம் விபத்து ஏற்படுத்திய கார் அங்கிருந்தது. விபத்து ஏற்பட்ட தகவல் தெரிந்து போலீஸார் சம்பவயிடத்திற்கு வந்து விசாரித்தார்கள். அவர்கள் கார் ஓட்டி வந்த நபர் யார் என்ற விவரங்களை விசாரித்து கூறியதன் அடிப்படையில் நான் புகாரை அளித்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான் அன்று அளித்த புகார்தான். **மேற்படி புகார் அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

விபத்தில் காயமடைந்த நவீன்குமார் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார் என்ற தகவல் தெரிந்தது. போலீஸார் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை=

நான் காயம்பட்ட நபரை மருத்துவமனையில் சேர்த்துவிட்டு நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்றால் சரிதான். என்னை யார் மீண்டும் புகார் அளிக்க அழைத்தது என்றால் நானாகதான் சென்றேன். போலீஸார் என்னிடம் வெள்ளைதாளில் கையெழுத்து வாங்கினார்கள். அதுதான் தற்போது நான் காண்பித்த கையெழுத்து என்றால் சரிதான். விபத்து ஏற்படுத்திய காரின் ஓட்டுநர் என்றுதான் போலீஸாரிடம் கூறியிருந்தேன் என்றாலும் அவர் பெயர் விவரம் என்னவென்று சொல்லவில்லை என்றால் சரிதான்.நான் செல்வதற்கு முன்பே சம்பவயிடத்தில் மணிகண்டன் த.பெ.முருகன் மற்றும் அருள் ஆகியோர் இருந்தார்கள்.

மறுவிசாரணை= இல்லை

**நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.**
**சி.சி. 172/2020**

2023 ம் ஆண்டு ஜனவரி மாதம் 30 ம் நாள் திங்கட்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா. 2 வது நபரின் வாக்குமுலம் (1969 ம் ஆண்டின் 54 வது விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின்படி திரு.எஸ்.பூபதி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மணிகண்டன் | வயது | 29 |
| த.பெ.(அ)க.பெ. | முருகன் | தொழில் | துணிக்கடை |
| ஊர்/பணிபுரியுமிடம் | விஷமங்கலம் | சமயம் | இந்து |
| வட்டம் | திருப்பத்தூர் | சாதி | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | | |

முதல் விசாரணை : எதிரி மனுவின் பேரில் ஆஜரில்லை.

(1) நான் விஷமங்கலம் கிராமத்தில் வசிக்கிறேன். நான் துணிக்கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 ஐ தெரியும். அவர் எனது உறவினர். விபத்தில் இறந்துபோன நவீன்குமார் எனது உறவினர். கடந்த 2016 ம் வருடம் எனக்கு தேதி மாதம் நினைவில்லை. நான் திருப்பத்தூர் செல்வதற்காக விஷமங்கலத்திலிருந்து ஆட்டோவில் வந்து கொண்டிருந்தேன். திருப்பத்தூர் டு திருவண்ணாமலை சாலையில் உள்ள வெப்பலாம்பட்டி மேம்பாலம் அருகே உள்ள வளைவில் நவீன்குமாருக்கு சாலை விபத்து ஏற்பட்டு விழுந்து கிடந்தார். நான் அருகில் சென்று பார்த்தேன். நானும் அ.சா.1 ம் ஆட்டோவில் சிகிச்சைக்காக திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். கார் மோதி விபத்து ஏற்பட்டதாக தெரிந்துக்கொண்டேன். காரை யார் ஓட்டி வந்தார்கள் என்று எனக்கு தெரியாது. போலீஸார் என்னை விசாரிக்கவில்லை.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை=

விபத்து குறித்து நேரடையாக எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான்.

மறுவிசாரணை= இல்லை

**நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.**

**சி.சி. 172/2020**

2023ம் ஆண்டு ஜனவரி மாதம் 30ம் நாள் திங்கட்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா. 3வது நபரின் வாக்குமுலம் (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி திரு.எஸ்.பூபதி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சந்தோஷ்குமார் | வயது | 32 |
| த.பெ.(அ)க.பெ. | முருகன் | தொழில் | – |
| ஊர்/பணிபுரியுமிடம் | விஷமங்கலம் | சமயம் | இந்து |
| வட்டம் | திருப்பத்தூர் | சாதி | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | | |

முதல் விசாரணை : எதிரி மனுவின் பேரில் ஆஜரில்லை.

(1) நான் விஷமங்கலம் கிராமத்தில் வசிக்கிறேன். அ.சா.1 ஐ தெரியும். அவர் எனது உறவினர். விபத்தில் இறந்துபோன நவீன்குமார் எனது தம்பி. 24.11.2016 அன்று எனது தம்பிக்கு சாலை விபத்து ஏற்பட்டு இறந்துவிட்டதாக எனக்கு போன் முலம் தகவல் வந்தது. நான் அப்போது வேலூரில் இருந்தேன். தகவல் தெரிந்து நான் திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு வந்து பார்த்தேன். மேல்சிகிச்சைக்காக சென்னை அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்வதற்காக ஆம்புலன்ஸ் முலம் அழைத்துச் சென்றோம். எனது தம்பி வழியிலேயே இறந்துவிட்டார். போலீஸார் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை=

விபத்து குறித்து நேரடையாக எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான்.

மறுவிசாரணை= இல்லை